சுருக்கம்

000533

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நாகப்பட்டினம் மாவட்டம் – காலஞ்சென்ற திரு.டி.நெடுஞ்செழியன் என்பவரின் மனைவி திருமதி.R.அனுசுயா இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (2ப) எண்.17 நாள் : 05.02.2019.

படிக்கப்பட்டவை:

1. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.580/ஊ.வ.5/2018, நாள் 28.05.2018.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.48910/2018/டி2, நாள் 09.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர் நிலை–1 ஆகப் பணியில் இருக்கும் போது 24.10.2017 அன்று காலமான திரு.டி.நெடுஞ்செழியன் என்பவரின் மனைவி திருமதி.R.அனுசுயா என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 04.06.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.R.அனுசுயா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 08.01.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.06.1974 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 43 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 44 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்க யாரும் இல்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவை உரிய அசல் ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.R.அனுசுயா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 04.06.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணிக்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 24.01.2019 –ஆம் நாளிட்ட அலுவல் சாரா குறிப்பு எண்.23749/க்யூ–1/2018 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.2608/ஜி2/2019, நாள் 31.01.2019 –ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–35.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், நாகப்பட்டினம்.

**நகல்**

திருமதி.R.அனுசுயா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, நாகப்பட்டினம் மாவட்டம்.
(வழி: நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

Endt. No: 580/2018/அவ5
நாள்: 22.02.2019.

மா.ஆட்சியரகம் (வ)
நாகப்பட்டினம்.

பிரிவு அலுவலர்.

அரசாணை அசலாக சார்வு செய்யப்படுகிறது.

22.2.2019

பெறுநர்:
திருமதி.ஆர்.அனுசுயா, இ.உ.,
ஊராட்சி ஒன்றியம்,
சீர்காழி (உரிய வழியாக).
நகல்: வ.வ.அ. (வ.ஊ.) சீர்காழி, (சார்வு செய்து மீள அனுப்ப)
நகல்: அ.வ.5 மற்றும் 2 இருப்பு கோப்புக்கு.